செ.வெ.எண்: 51 / ஆகஸ்ட் நாள் : 26.08.2017

# இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் குழந்தைகள் நல நரம்பியல் பிரிவினை துவக்கி வைத்த மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் இராமநாதபுரம் அரசு மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ1.80கோடி மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை அரசின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அர்பணித்தார்.

இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் இன்று (26.08.2017) மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் , மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப.,அவர்கள் தலைமையில், குழந்தைகள் நல நரம்பியல் பிரிவினைத் துவக்கி வைத்து, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு ரூ.1.8 கோடி மதிப்பிலான மருத்துவ உபகரணங்களை அரசின் சார்பில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு வழங்கிப் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசியதாவது:

தமிழ்நாடு அரசு பொதுமக்களின் உடல்நலனைக் பேணிக் காத்திடும் வகையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் 2016-17ஆம் ஆண்டு மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி திட்டத்தின் கீழ் இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் சிகிச்சைக்கென்று ரூ.8,65,200 கலர் அல்ட்ரா சோனாகிராம் கருவியும் ,ரூ.199500 மதிப்பில் TMT , ரூ.15400 மதிப்பில் V Care baby warmer , ரூ.173250 BPL Pulse Oximerer CIEO, ரூ.25300 Goley Suction Apparatus ½ HP motor , ரூ.116160 V Care Phototheraphy Double side LED , ரூ.598500 Ultra Sonogram Black and White மருத்துவ உபகரணங்கள் என மொத்தம் ரூ.2131910 மதிப்பிலான மருத்துவ உபகரணங்களும், அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கென ரூ.2028866 மதிப்பில் Ice Lined Refrigerator, ரூ.664981 மதிப்பில் Deep Freezer, ரூ.921500 மதிப்பில் ECG Machine, ரூ.1990000 மதிப்பில் Semi Auto Analyzer, ரூ.4263000 மதிப்பில் Ultra Sonogram Scan என மொத்தம் ரூ.9868347 மதிப்பிலான மருத்துவ உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் புதிதாக 2 இரத்த சுத்திகரிப்பு கருவிகள் (Dialysis Unit) மற்றும் ஒரு ஆர்.ஓ.பிளாண்ட் ஆகியவற்றினைச் சேர்த்து மொத்தம் 7 இரத்த சுத்தகரிப்பு கருவிகளும், இரு ஆர்.ஓ பிளாண்ட்டுகளும் பொருத்தப்பட்டு செயல்பட்டு வருகிறது. மூளை வளர்ச்சி மற்றும் குறைபாடு சிகிச்சை ஒவ்வொரு புதன்கிழமையிலும் செயல்படுத்தப்படும். மேலும் குழந்தைகள் நரம்பியல் மருத்துவ சிகிச்சை மாநில அளவில் முதன் முறையாக வாரம் ஒரு முறை இராமநாபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் நடத்தப்படுகிறது.

இதுதவிர மாவட்டத்தில் உடற்பயிற்சி மற்றும் பேச்ச பயிற்சி போன்றவை குழந்தைகளுக்கு அளித்தும், அவர்களின் குறைகளை ஆரம்ப நிலையில் கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படவுள்ளது. அவசர சிகிச்சை பிரிவிற்கு 4 மருத்துவர் இடங்களும், பொது மருத்துவ சிகிச்சை பிரிவிற்கு 1 இடமும் வழங்கப்படவுள்ளது. மேலும் எலும்பு முறிவு மற்றும் மகப்பேறு பிரிவுகளுக்கு ஒவ்வொரு இடமும் விரைவில் வழங்கப்படவுள்ளன. மருத்துவ உபகரணங்களை முறையாக பராமரித்தும், பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு முறையாக சிகிச்சை அளிக்க முனைப்புடன் பணியாற்றிட வேண்டும் என மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் பேசினார்.

அதனைத்தொடர்ந்து,மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் டாக்டர்.எம்.மணிகண்டன் அவர்கள் , மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் ரூ.1 கோடி மதிப்பில் புதியதாக கட்டப்பட்டு வரும் மாவட்ட நோய் தொடக்க சேவை மையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு, மருத்துவமனையில் அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை முறைகளின் தரம் குறித்து மருத்துவமனையில் உள்ள நோயாளிகளிடத்தில் கேட்டறிந்தார். பின்பு மாண்புமிகு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள் அம்மா ஆரோக்கிய திட்டத்தினையும் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் இணை இயக்குநர் (நலப்பணிகள்) டாக்டர்.சகாய ஸ்டீபன்ராஜ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**